(Under Section 173 BNSS)
(BNSS பிரிவு 173 இன் கீழ்)

# FIRST INFORMATION REPORT

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8129859

1. District / மாவட்டம் : TRICHY    PS / காவல்நிலையம் : TRICHY VACC    Year / ஆண்டு : 2024    FIR No. / மு.த.அ. எண் : 13/2024    Date / நாள் : 30.9.2024

2. (i) Act சட்டம்: P.C. Act 1988 as (amended in 2018)    Sections பிரிவுகள்: 7(a).
   (ii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:    Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : / குற்ற நிகழ்வு நாள்    Date from / நாள் முதல் : 26.9.2024    Date to / நாள் வரை :
   Time Period / நேர அளவு :    Time from / நேரம் முதல் : 1315 Hrs.    Time to / நேரம் வரை :
   (b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : 30.9.2024    Time / நேரம் : 0630
   (c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் : 30.9.2024    Time / நேரம் :

4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக : TYPED IN COMPUTER

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் : APPROXIMATELY 26 KM NORTH EAST
   Beat Number : / முறைக் காவல் எண்    (b) Address : / முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்    District : / மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : / குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : G. MOHAN    (b) Father's/ Husband's Name : / தந்தை / கணவர் பெயர் : GANESAN
   (c) Date / Year of Birth : / நாள் / பிறந்த ஆண்டு : 14.03.1971    (d) Nationality / நாட்டினம் : INDIAN    (e) Passport No. : / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : / வழங்கப்பட்ட நாள்    Place of Issue : / வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : / தொழில் : AGRICULTURIST    (g) Address : / முகவரி : 310, MALIYAMMAN KOVIL STREET, MANGAMMALPURAM, ANBIL, LALGUDI (TK) TRICHY

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   RAVIKUMAR, DY. TAHSILDAR, LALGUDI TALUK TRICHY DISTRICT

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   Delay Due to complainant

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate Sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………….. Rank ………………….. to take up the Investigation / Refused Investigation / transferred to PS……………………………………………on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………….. நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

G. Mohan 30.9.2024 | G. [signature] 30.09.2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
[G. SAKTHIVEL]
Inspector of Police
YSMC TRICHY

15. Date & Time of despatch to the court: 30.09.2024
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் ………………………
Rank: நிலை …………………No. எண் ……….

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.13/2024–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், இன்று 30.09.2024 பணியில் இருந்த போது காலை 06.30 மணியளவில் திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுக்கா, அன்பில் கிராமம், மங்கம்மாள்புரம், காளியம்மன்கோவில், கதவு எண்.310 என்ற முகவரியில் வசித்து வரும் திரு.கணேசன் மகன் திரு.மோகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவை பெற்று, அது குறித்து சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை, இயக்குநரகத்திற்கு தெரிவித்து, அனுமதி பெற்று அந்த புகார்மனு குறித்து முதல் கட்ட விசாரணை ரகசியமாக செய்து, புகார்மனுவில் கூறப்பட்டுள்ள திருச்சி மாவட்டம், இலால்குடி தாலுக்கா அலுவலகத்தில் துணை வட்டாட்சியராக பணிபுரியும் திரு.ரவிக்குமார் மற்றும் புகார்தாரர் திரு.மோகன் ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி இரகசிய விசாரணை செய்து எதிரியின் கெட்ட நடத்தையை உறுதி செய்துகொண்டு, பின்னர் இன்று 30.09.2024ந்தேதி காலை 08.30 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, குற்ற எண்.13/2024 சட்டப்பிரிவு 7(a) ஊழல் தடுப்பு சட்டம் 1988(as amended in 2018)–ன் படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு. திருச்சி 30.09.2024 அனுப்புநர் G.மோகன், வயது 53, த/பெ கணேசன், 310, காளியம்மன்கோவில்தெரு, மங்கம்மாள்புரம், அன்பில்கிராமம், இலால்குடி தாலுக்கா, திருச்சி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சிராப்பள்ளி. ஐயா, நான் அன்பில் கிராமம், மங்கம்மாள்புரத்தில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான், விவசாயம் செய்து வருகிறேன். கடந்த 22.05.2002ஆம் தேதி மங்கம்மாள்புரம் கிராமத்தில் சர்வே எண்.40/7ல் 0.94 செண்ட் நிலத்தை ஸ்ரீரங்கம், கீழராஜவீதியைச் சேர்ந்த திரு.கிருஷ்ணசாமி என்பவரிடமிருந்து எனது தந்தையார் திரு.கணேசன் கிரையம் பெற்று விவசாயம் செய்து வந்தார். எனது தந்தையார் கடந்த 2002 ஆம் ஆண்டு இறந்ததற்கு பிறகு மேற்படி நிலத்தில் நான் விவசாயம் செய்து வருகிறேன். மேற்படி விவசாய நிலத்திற்குரிய கம்ப்யூட்டர் பட்டாவை நான் பார்க்கையில் அதில் எங்களது குடும்ப பெயர்களுடன் நிலத்தை விற்பனை செய்த திரு.கிருஷ்ணசாமி என்பவரது பெயர் தவறுதலாக கிருஷ்ணமூர்த்தி என குறிப்பிடப்பட்டிருந்தது. மேற்படி கம்ப்யூட்டர் பட்டாவிலுள்ள பெயரை திருத்தும் பொருட்டு நான் கடந்த 05.03.2024ந்தேதி இலால்குடி வருவாய் கோட்டாட்சியருக்கு உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்தேன். பிறகு இலால்குடி வருவாய் கோட்டாட்சியர் பெயர் திருத்தம் செய்து தரக்கோரிய எனது மனுவினை நடவடிக்கைக்காக வட்டாட்சியர் இலால்குடிக்கு அனுப்பி வைத்தார். அதன்பிறகு நான் எங்கள் கிராம நிர்வாக அலுவலரை சுமார் ஒரு மாதத்திற்கு பிறகு சென்று சந்தித்து எனது மனுவின் நிலை குறித்து கேட்டபோது அவர், அம்மனுவின் மீது நடவடிக்கை எடுத்து இலால்குடி துணை வட்டாட்சியருக்கு அனுப்பி விடுவதாக தெரிவித்தார். பிறகு நான் கடந்த 2024 ஜூலை மாதம் முதல் பலமுறை இலால்குடி தாலுகா அலுவலகம் சென்று துணை வட்டாட்சியர் திரு.ரவிக்குமார் அவர்களை சந்தித்து பட்டா பெயர் திருத்தம்

குறித்து கேட்டபோது, அவர் தான் உங்களது நிலத்தை பார்த்துவிட்டு பெயர் திருத்தம் செய்து தருவதாக கூறி வந்தார். ஆனாலும் கம்ப்யூட்டர் பட்டாவில் பெயர் திருத்தம் செய்யப்படாமல் இருந்து வந்தது. அதனால் நான் கடந்த 26.09.2024ந்தேதி பிறபகல் 1.15 மணிக்கு இலால்குடி வட்டாட்சியர் அலுவலகம் சென்று DT ரவிகுமார் சாரை பார்த்தபோது அவர் உங்களது நிலத்திற்கான கம்ப்யூட்டர் பட்டாவில் பெயர் திருத்தம் செய்துதர ஏற்பாடு செய்து தருகிறேன். நான் ஏற்பாடு பண்ணி அனுப்பிவச்சாதான் உங்களுக்கு கம்ப்யூட்டர் பட்டாவில் பெயர் திருத்தம் செய்து கிடைக்கும். உங்களுக்கு பட்டாவில் பெயர் திருத்தம் செய்து கிடைக்கணும்னா எனக்கு தனியாக ஐம்பதாயிரம் ரூபாய் கொடுத்திடுங்க என்று கேட்டார். நான் எதுக்கு சார் இவ்வளவு பணம் என்று கேட்டேன். அதற்கு அவர், இப்போது நிலத்தின் விலையெல்லாம் உயர்ந்துவிட்டது ரூபா ஐம்பதாயிரம் கொடுத்தாதான் உனக்கு கம்ப்யூட்டர் பட்டாவில் பெயர் திருத்தம் செய்து கிடைக்க ரெக்கமண்ட் பண்ணுவேன் என்று கண்டிப்பாக கூறினார். அதற்கு நான் அவரிடம், நானே விவசயாம் செய்துதான் என் குடும்பத்த கவனிச்சிக்கிறேன், ஐம்பதாயிரம் ரூபா என்னால ரெடி பண்ண முடியாது சார், பணம் இல்லாம முடிச்சு கொடுங்க சார் என்று சொன்னேன். அதற்கு DT திரு.ரவிகுமார் அவர்கள் விவசாயம் பார்க்கிறேன்னு சொல்றிங்க வேணும்னா முப்பதாயிரம் கொறச்சி, இருபதாயிரம் கொடுத்திடுங்க, இதுக்குமேல கம்மி பண்ண முடியாது என்றும், இல்லன்னா உங்க பட்டா பெயர் திருத்தம் மனு ரிஜக்ட் ஆகிடும் என்று வற்புறுத்தி சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை, இருந்தாலும், அப்போதைக்கு அவரிடம், சரிங்க சார் பணம் ஏற்பாடு பண்ணிட்டு வந்து பார்க்கிறேன் என்று சொல்லிவிட்டு அங்கிருந்து வந்துவிட்டேன். நான் விண்ணப்பித்திருந்த எங்களது விவசாய நிலத்திற்கு கம்ப்யூட்டர் பட்டாவில் நிலத்தை விற்பனை செய்த ஸ்ரீரங்கம் கீழராஜவீதியைச் சேர்ந்த கிருஷ்ணசாமி என்ற பெயருக்கு பதிலாக கிருஷ்ணமூர்த்தி என்று குறிப்பிடப்பட்டுள்ளதை பெயர் திருத்தம் செய்து கம்ப்யூட்டர் பட்டா கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு ரூ.20,000/- லஞ்சம் கேட்ட இலால்குடி துணை வட்டாட்சியர் திரு.ரவிக்குமார் என்பவர் மீது நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு, Sd.xxx (G.Mohan) 30.9.2024 Submitted to the Court of Hon'ble Special Judge, Special Court for Prevention of Corruption Act 1988, Trichy:

Received this report at 0630 hrs. on 30.09.2024 and made Preliminary Enquiry and registered a Case in Trichy V&AC Cr.No.13/2024 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 0830 hrs. on 30.09.2024. Sd.xxx (G.SAKTHIVEL) 30.09.2024 Inspector of Police, V&AC, Trichy.

G. Sakthivel
30.09.2024
[G. SAKTHIVEL]
Inspector of Police
V&AC
Trichy